**தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபை**

**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதி நகர தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உத்தியோகபூர்வ வாகனமொன்றும், தண்ணீர் பவுசரும் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 9,850,000 தொகை மற்றும் ரூபா 6,000,000 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 15,850,000 தொகை கணக்குகளில் கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பொருட்கள் கிடைத்தலோ அல்லது பணக் கொடுப்பனவு செய்யப்படாமையினால் அப்பெறுமானத்தால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவினம் என்பன அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்நோக்கு பாரந்தூக்கி இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,726,085 தொகை கணக்குகளில் கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கட்டளை விநியோகிப்பதற்கும், பொருள் கிடைப்பனவு அல்லது பணம் செலுத்தப்படாமையினால் அப்பெறுமதியால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவினம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கலி பவுசர் சேவையிலிருந்து ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வருமானத்தைக் கணக்கு வைக்கும் போது ஏனைய கட்டணமின்றி கடன்பட்டோர் பெறுமதி மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் பணம் அறவீடு செய்யும் போது பெறப்பட்ட ஏனைய கட்டணங்கள் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் ஊழியர் கடன் மேலதிக அறவிடல் ரூபா 258,339 ஆக இருந்த போதிலும், அந்த மீதி ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ்

காண்பிக்கப்படாமையினால் அந்த அளவால் நடைமுறைப் பெறுப்பு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) தொலைத்தொடர்பு கோபுர வருமானம் ஆதனவரி வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 14,292,022 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) வெளித்தரப்பினரால் 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சபைக்குக் கையளிக்கப்பட்ட 04 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கலிபவுசர் சேவை வருமானப் பதிவேட்டின் பிரகாரம் (நிலுவை) கலிபவுசர் சேவை வருமானம் ரூபா 638,545 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 464,545 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 174,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டில் கழிவுப்பொருள் அகற்றுவதற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 57,093,145 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அந்த செலவினம் ரூபா 62,766,562 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,673,417 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

(அ) வெளித்தரப்பினரால் மாநகரசபைக்கு எதிராக 33 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக 21 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இது தொடர்பாக செலுத்துவதற்கு ஏற்பட்ட இழப்பீட்டுப் பணம் தொடர்பான ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) பான்ஸ் கம்பனி தொடர்பாக வணிக நீதிமன்றத்தில் தீர்ப்பிற்கு எதிராக சபையினால் மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்குரியதாக கணிசமான இழப்பீட்டுத் தொகையொன்றை பர்ன்ஸ் கம்பனி கோரியிருந்ததுடன் அதற்கான சட்டத்தரணி கட்டணமாக ரூபா 1,201,333 தொகையொன்று இதுவரையில் செலுத்தப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

கீழே காண்பிக்கப்படுகின்ற இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 11 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை அவைகளுக்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 31,071,253 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மாகாண சபை உதவி கடன்பட்டோர் மீதி பேரேட்டுக்கணக்கு மற்றும் பட்டோலையின் பிரகாரம் ரூபா 8,520,625 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 8,619,098 ஆனமையால் ரூபா 98,473 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2002 முதல் 2017 ஆம் ஆண்டு வரை வருமானமாகப் பெறப்பட்ட ரூபா 836,274 பெறுமதியான 30 காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும், அதற்கான பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 முதல் 2017 வரையான காலப்பகுதிக்குரியதாக 14 நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய கலிபவுசர் வருமானம் ரூபா 272,545 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2006 மற்றும் 2007 காலப்பகுதிக்குரிய ரூபா 121,456 தொகையான தீர்க்கப்படாத ஆதனக் கடன் வட்டி முற்பண மீதியை உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை உறுப்பினர் படி ரூபா 1,827,000 தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) 2013 முதல் 2017 வரையான காலப்பகுதிக்குரிய சம்பளம் ரூபா 133,533,581 தொகையை உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 12,503,298 கூட்டுப்பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

பட்டோலைகள், மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் உடன்படிக்கை போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 11,297,740 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 218 ஆம் பிரிவு | - | சபையின் நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்றும், பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான கூற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| (i) XIX அத்தியாயம் | | |
| • I ஆம் பிரிவு | - | அரசாங்க வீடுகள் நிரற்படுத்தப்பட்ட மற்றும் பொது சேவை வீடுகள் என வகைப்படுத்தப்படவில்லை. |
| • 4.2.1 ஆம் பிரிவு | - | உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்காக வீடுகள் ஒதுக்கி வழங்கப்பட்ட அதிகாரத் தரப்பால் 18 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் புள்ளி வழங்கும் முறைமையொன்று தயாரிக்கப்படவில்லை. |
| • 4.3.4 ஆம் பிரிவு | - | ஒவ்வொரு வீட்டின் தரத்திற்காகவும், தனிப்பட்ட காத்திருத்தல் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 13.6 ஆம் பிரிவு | - | 12 மாத கால எல்லையில் விழா முற்பணம் ஒரு தடவை மாத்திரமே செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக முன்னர் பெறப்பட்ட கடன் பணம் முழுமையாக அறவிடப்படாதிருக்கும் போது சபையின் ஊழியர்களுக்காக விழா முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) | - | 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப மற்றும் பூரண அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | - | நட்டம் மற்றும் இழப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 188(2) | 48,681 | வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தேறாத 05 காசோலைகள் மற்றும் 02 காசுக் கட்டளைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 341 | - | அடியிதழ் புத்தகங்கள் தொடர்பான விபரம் ஜீ.ஏ.என் 20 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்றில் குறிப்பிடப்படாதிருப்பதுடன் புத்தக வகையின் பிரகாரம் பதிவேட்டில் தனித்தனியாக பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 342(1) | - | அடியிதழ் புத்தக இலக்கம் ஒழுங்கு முறையாக பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்படவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) மற்றும் 371(5) | 1,558,187 | பெறப்பட்ட உபகட்டு நிதி பணிகள் முடிவடைந்ததும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், பெறப்பட்ட முற்பணம் கணிசமான காலதாமதத்துடன் தீர்க்கப்படாமல் இருந்ததுடன் ஆண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்க்கப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. |
| (vii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 35,550 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத செல்லுபடிக் காலத்தை விஞ்சிய 18 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நிதிப்பிரமாணம் 1653 | - | வாகனங்களின் மைலோ மீற்றர் செயலிழந்து செல்லுமிடத்து விரைவாக பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நீண்ட காலமாக மைலோ மீற்றர் செயலிழந்த வாகனங்களின் எண்ணிக்கை 50 அளவில் சபையில் காணப்பட்டன. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(உ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை - கணனி மற்றும் மென்பொருளுக்காக தனிப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.7 போதிளவான அதிகாரப்பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188(1) ஆம் பிரிவிற்கு முரணாக மாதாந்த பொதுக் கூட்டத்திற்கு சமுகமளிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு சீருடைகள் வழங்குவதற்காக 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்ட பணம் ரூபா 725,000 ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 341,690,299 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 349,470,297 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 365,100 | 686,095 | 243,364 | 343,178 | 357,300 | 363,007 | 202,934 | 3,519 |
| வாடகை | 29,747 | 27,975 | 10,862 | 15,085 | 19,574 | 17,966 | 13,752 | 9,845 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 34,235 | 94,318 | 18,893 | 62,782 | 31,235 | 40,546 | 20,232 | 33,296 |
| ஏனைய வருமானம் | 433,815 | 355,995 | 320,332 | 173,227 | 365,507 | 406,242 | 356,794 | 413,704 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2017 ஆம் ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட மீண்டெழும் வருமானத்தில் ரூபா 51,463,446 தொகையை உழைத்துக்கொள்வதற்கு சபை தவறியிருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட மூலதன வருமானத்தை விஞ்சி ரூபா 12,800,000 தொகை உழைக்கப்பட்டிருந்தது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**(அ) ஆதனவரி**

(i) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதனவரி ரூபா 367,408,597 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 132,912,366 தொகை அதாவது 36 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 306,489,840 ஆக இருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டில் ரூபா 109,008,030 தொகை அதாவது 36 சதவீதம் அறவிடப்பட்டமையால் நிலுவை ரூபா 197,481,810 ஆகும்.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 357,578,962 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 100,000 தொகையை விஞ்சிய 396 ஆதனவரி அலகுகளிலிருந்து ரூபா 140,499,759 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 100,000 தொகையினை விஞ்சிய நிலுவை மீதி காணப்படுகின்ற அரசாங்க நிறுவனங்கள் மீளாய்வாண்டிற்காகவும் ஆதனவரி செலுத்தாமையினால் வருடாந்த ஆதனவரி மீதி அதிகரித்திருந்தது.

(v) 2017 ஆம் ஆண்டின் போது ஆதன வரிக்காக கிடைத்த 47 காசோலைகள் மதிப்பிழந்திருந்ததுடன் அதில் ரூபா 2,171,626 பெறுமதியான 19 காசோலைகளுக்காக மீண்டும் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் வரி**

(i) சபையினால் கழிவுப்பொருட்கள் அகற்றப்படுகின்ற வியாபார நிலையங்களுடன் உடன்படிக்கை செய்யப்படாமையினால் நிலுவைக் கழிவுப்பொருள் கட்டணத்தை அறவிடும் போது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கமுடியாதிருந்ததுடன் 2003 நவம்பர் 18 ஆந் திகதி 08(10)35 ஆம் இலக்க சபைத் தீர்மானம் மற்றும் நிதி செயற்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் நிலுவை கழிவுப் பொருள் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கழிவுப்பொருள் வருமானம் ரூபா 9,768,276 ஆகும்.

(ii) முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்டிருந்த நிலுவை மீதி காணப்பட்ட 173 நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டின் போதும் கழிவுப்பொருள் அகற்றும் சேவை வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போதும் நிலுவை செலுத்துதல் அல்லது ஆண்டிற்குரிய பணத்தையேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய வரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கேபள் ரீ.வீ வருமானம் ரூபா 3,594,953 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வாடகை**

2014 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற பெறவேண்டிய நானாவித வருமான மீதியில் உள்ளடக்கப்பட்ட இறைச்சிக் கடை வாடகை நிலுவை மீதியான ரூபா 2,471,517 தொகையினை இனங்கண்டு அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

(அ) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வியாபார வரி வருமானம் ரூபா 38,237,000 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 29,867,980 தொகை அதாவது 78 சதவீதத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வியாபார வரி மீதி ரூபா 32,395,547 ஆக இருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 4,521,543 தொகை அதாவது 14 சதவீதம் அறவிடப்பட்டிருந்தமையால் ரூபா 27,874,004 தொகை மேலும் நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம்**

2013 முதல் 2017 வரையான காலப்பகுதிக்குரியதாக நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 143,299,238 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கப்பெறாமை**

ரூபா 1,550,750 தொகையான பூர்த்தி வேலைப் பெறுமதியுடைய வின்சர் பார்க் முன்பள்ளிப் பாடசாலை வேலை 2017 யூலை 03 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், முன்பள்ளிப் பாடசாலையாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

2017 ஆம் ஆண்டில் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வகைப்படுத்தப்படாத 33,498 தொன் கழிவுப்பொருட்கள் அதாவது மொத்த கழிவுப்பொருளின் அளவில் 65 சதவீதமாக இருந்ததுடன் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல் சரியான பிரகாரம் முகாமை செய்யப்படாமையினால் கலப்பு கழிவுகளுக்காக ரூபா 25,003,328 தொகையை மேலதிகமாகச் செலுத்துவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது.

**(இ) கைவிடப்பட்ட இலக்குகள்**

பன்முகப்படுத்தப்பட்ட நிதியுதவியின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய ரூபா 499,928 பெறுமதியான செயற்திட்டம் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் நிதி

ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய ரூபா 9,250,000 பெறுமதியான 02 செயற்திட்டங்கள் என்பன இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

**(ஈ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

சபை நிதியத்தின் கீழ் அமுல்படுத்த வேண்டிய ரூபா 70,260,140 பெறுமதியான 08 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

**(அ) திட்டங்களை அங்கீகரித்தல் மற்றும் தரச் சான்றிதழ் விநியோகித்தல்**

(i) கோரப்பட்ட தரச்சான்றிதழ் மற்றும் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் தொடர்பான விபரங்கள் அடங்கிய பதிவேடொன்று பேணப்படாமையினால் கோரப்பட்ட தரச் சான்றிதழ் தாமதமின்றி விநியோகிக்கப்பட்டமையை உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கோரப்பட்ட தரச்சான்றிதழ்கள் கணிசமான காலதாமதத்துடன் 2017 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ii) தரச் சான்றிதழ் கோரும் போது சபைக்கு விண்ணப்பப் பத்திரம் கிடைத்த திகதியை உறுதிப்படுத்தும் வகையில் திகதி முத்திரை இடப்படாமையினால் தாமதமின்றி விநியோகித்தல்கள் இடம்பெறுகின்றனவா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ்களின் பிரதிகள் எதிர்கால நடவடிக்கைகளுக்காக உரிய பிரிவிற்கு அனுப்பப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட தரச் சான்றிதழ்களின் பிரதிகள் உரிய நபர்களுக்கு வழங்கப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) மதிப்பீட்டு வருமானம்**

2017 ஆம் ஆண்டிற்காக காணி மற்றும் கட்டிட உரிமையாளர்களின் பெயர் மற்றும் முகவரி பதிவு செய்யும் கட்டணத்தை விதிப்பதற்காக 2016 நவம்பர் 04 ஆந் திகதிய 1992 ஆம் இலக்க வர்த்தமானியில் குறைபாடுகள் மற்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடுகளுடன் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 23 | 17 | 6 | - |
| மூன்றாம் நிலை | 12 | 6 | 6 | - |
| இரண்டாம் நிலை | 342 | 292 | 50 | - |
| ஆரம்ப நிலை | 1,398 | 1,310 | 88 | - |
| ஏனைய (அமைய) | - | 30 | - | 30 |
| மொத்தம் | 1,775 | 1,655 | 150 | 30 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 150 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) சிரேஷ்ட நிலையில் 06 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமையின் காரணமாக சபையின் செயற்பாடுகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(இ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ள ஊழியர் ஒருவர் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாமையினால் அந்த நபர்களுக்காகச் செலுத்தப்பட்ட சம்பளத்தை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மேலதிகமாக சபையின் தேவைக்காக அமைய அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் போது 30 சுகாதாரத் தொழிலாளர்களும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நாளாந்த அடிப்படையில் இரண்டு ஊழியர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் ரூபா 6,783,961 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 07 சாரதி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக 2017 ஒக்தோபர் மாதம் ரூபா 416,806 செலவில் செய்திப் பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், விண்ணப்பங்களை அனுப்புவதற்காக வழங்கப்பட்ட காலம் 14 நாட்களாக போதியளவில் இல்லாமையினால் மீண்டும் திகதியை நீடிப்பதற்காக ரூபா 18,078 மேலதிக செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் மூன்று பேர் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

### (அ) வியாபார நிலைய வாடகை

(i) சபைக்குச் சொந்தமான 371 கடைகளிலிருந்து 239 இன் வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் அனேகமான கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், வாடகையாளர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. அவ்வாறே சில உடன்படிக்கைகளில்

உடன்படிக்கைக் காலம் கடந்திருந்த போதிலும், மீண்டும் உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வாடகை உடன்படிக்கைகளின் பிரகாரம் தொடர்ச்சியாக 03 மாதங்கள் வாடகை செலுத்தாதுள்ள கடை உரிமையாளர்கள் தொடர்பாக சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் கடை உரிமையாளர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 11 கடைகள் வியாபாரங்களைச் செய்யாமல் மூடிவைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) எஸ்.த.எஸ் ஜயசிங்ஹ கேட்போர் கூடம்**

(i) எஸ்.த.எஸ்.ஜயசிங்ஹ கேட்போர் கூட A மண்டபத்தில் 700 பைபர் கிளாஸ் கதிரைகளுக்கு மேற்பட்ட அளவொன்று காணப்பட்டபோதிலும், சில இடங்களில் கதிரைகள் உடைந்து காணப்பட்டதுடன் வளிப்பதனாக்கி செய்யப்பட்ட மண்டபத்தின் சில கதவுகளும் உடைந்திருந்தன. அவ்வாறே மேடை மின் விளக்குகள் தொகுதி செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் மேடையைச் சுற்றியுள்ள மின் மிளக்குகள் பழுதுபார்க்கக்கூடிய நிலையில் காணப்பட்டதுடன் மண்டபத்தின் பிரதான திரை சில சந்தர்ப்பங்களின் போது மூடுவதற்கு வசதியீனமான நிலையில் காணப்பட்டதுடன் மலசலகூட பாத்திரங்கள் உடைந்து பழுதுபார்க்கக்கூடிய நிலையில் காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் சனவரி முதல் யூலை வரை கேட்போர் கூடத்தின் வருமானம் ரூபா 1,938,735 ஆக இருந்ததுடன் கேட்போர் கூடத்தை நடாத்திச் செல்வதற்காக சபைக்கு செய்யவேண்டி ஏற்பட்ட செலவினங்களின் மேலதிக நேரம் தவிர ரூபா 2,999,221 ஆகும். அதன் பிரகாரம் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,060,486 ஆகும்.

(iii) கேட்போர் கூடத்தில் 2016 ஆம் ஆண்டிற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 3,883,005 ஆக இருந்ததுடன் அந்தக் காலப்பகுதியில் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 3,542,757 ஆகும். மேலும், 2017 ஆம் ஆண்டின் மார்ச் முதல் யூலை வரை கிடைத்த வருமானம் கேட்போர் கூடத்தில் அந்தந்த மாதங்களின் மின்சாரப் பட்டியலை தீர்ப்பதற்கேனும் போதியளவில் காணப்படவில்லை.

**(இ) முன்பள்ளிப் பாடசாலை முகாமைத்துவம்**

(i) 2013 செப்தெம்பர் 04 ஆந் திகதிய 1826/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் iv ஆவது பகுதியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட மேல் மாகாண சபையின் 2013 இன் 01 ஆம் இலக்க முன்பள்ளி பாடசாலை விதப்புரையின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாணததில் சகல முன்பள்ளிப் பாடசாலைகளும் இதன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 07 முன்பள்ளிப் பாடசாலைகள் அவ்வாறு பதிவுசெய்யப்படாதிருந்ததுடன் விதப்புரையின் vii ஆவது பகுதியின் பிரகாரம் முன்பள்ளி ஆசிரியைகளைப் பதிவு செய்து அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற முன்பள்ளிப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற 08 ஆசிரியைகள் அவ்வாறு பதிவு செய்திருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட விதப்புரையின் 12(1)ஏ பிரிவின் பிரகாரம் முன்பள்ளி பாடசாலைகளைப் பதிவு செய்யும் போது தகைமைகளுடன் உள்ள ஒரு ஆசிரியருக்காக 20 மாணவர்கள் ஆகும் வகையில் முன்பள்ளிப் பாடசாலை

நடாத்த முடியுமாக இருந்த போதிலும், சபையின் 05 முன்பள்ளி பாடசாலை ஆசிரியைகளுக்கான மாணவர் எண்ணிக்கை 24 இற்கும் 35 இற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) மேற்கூறப்பட்ட விதப்புரையின் v ஆவது பகுதியில் முன்பள்ளிப் பாடசாலைகளுக்கான நியமத்தின் பிரகாரம் காணப்பட வேண்டிய ஆரம்ப மற்றும் ஆகக் குறைந்த தகைமைகள் இன்றி அதாவது 12(1)(இ) இன் பிரகாரம் பாதுகாப்பு மதிலோ அல்லது பாதுகாப்பு வேலியொன்றஜன் மூலமோ முன்பள்ளிப் பாடசாலை வளவு பாதுகாக்கப்படாமை, 12(1)(ஊ) இன் பிரகாரம் முன்பள்ளிப் பாடசாலைகளில் விளையாட்டிற்கான வசதிகள் / இடவசதிகள் காணப்படாமை, 12(1)(எ) இன் பிரகாரம் முன்பள்ளி பாடசாலை வளவிற்கு அருகிலுள்ள சுற்றாடல் சிறப்பான முறையில் அமைக்கப்படாமை மற்றும் ஆரம்ப விளையாட்டு உபகரணங்களைக் கொண்டிருக்காமல் முன்பள்ளிப் பாடசாலைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன.

**(ஈ) மயான நிலம் மற்றும் சுடலைக் கூடம்**

(i) கல்கிஸ்ஸ, கொஹுவல, நெதிமால மற்றும் அத்திடிய மயான நிலங்களின் பெறுமதி மற்றும் பரப்பளவு என்பன காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிராதிருந்ததுடன் மயான நிலங்களின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான கையளித்தல் விபரம், உரித்துறுதி என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) காணி, கட்டிடங்கள் பதிவேடு மற்றும் 2009 இன் நில அளவையாளர் அளவிடையின் படி பரப்பளவு வேறுபட்டமைக்கான காரணங்கள் அவதானிக்கப்படாதிருந்ததுடன் சொத்துக்கள் பதிவேடும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்தல் அனுமதிப்பத்திர புத்தகம் களஞ்சியத்திலிருந்து கழிவுப்பொருள் பிரிவிற்கு பெற்றுக்கொள்ளும் போதும் அவற்றை மீண்டும் விநியோகிக்கும் போதும் முறையாக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iv) எழுத்துமூல அனுமதியின்றி மரணச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட முறையில் அல்லாமல் மரணத்தின் நடவடிக்கைகளைக் கையாளல், அனுமதிப்பத்திரத்தின் மூலப் பிரதிகள் கோவையில் உள்ளடக்கப்படாமை, மயான நிலனத்தில் காணப்படுகின்ற பதிவேடுகளில் தகனச் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளடக்கப்படாமை போன்ற உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகளினால் கட்டணம் அறவிடலின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 02 கெம்பெக்டர் வண்டி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பழுதுபார்க்க வேண்டிய நிலையில் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூடப்பட்டிருந்த 11 கடைகள் மற்றும் முத்திரை வைக்கப்பட்டுள்ள 37 கடைகள் என்பவற்றை மீண்டும் கையேற்று வாடகையாளர்களுக்கு வாடகைக்கு வழங்கி வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான ஸ்னோகல் வண்டியொன்று 2017 சனவரி முதல் செயழிலந்து காணப்பட்டதுடன் 2018 ஏப்ரல் வரை பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 171,352 தொகையான முற்பணமொன்று செலுத்தி கல்கிஸ்ஸ காலி வீதி, 368 ஆம் இலக்கத்திலுள்ள நகர சபையின் இரு மாடிக்கட்டிடம் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும், சபைக்கு எந்த வருமானத்தையும் பெற்றுக்கொள்ளாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(உ) சில காலமாக விநியோகிக்கப்படாமலும் காலாவதியானதுமான ரூபா 127,530 பெறுமதியான சீருடைகள் மற்றும் ரூபா 66,360 பெறுமதியான மின்சாரப் பொருட்கள் என்பன களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஊ) 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான காலத்தில் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 14 வாகனங்களை பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 வாகனப் பயன்பாடு**

(அ) மாநகர ஆணையாளர் 02 வாகனங்களைப் பயன்படுத்தியிருந்ததுடன் மேலதிகமாக பயன்படுத்திய வாகனத்திற்காக சனவரி முதல் திசெம்பர் வரை பயன்படுத்திய எரிபொருள் 2283 லீற்றருக்காக ரூபா 251,130 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பயன்படுத்தப்படுகின்ற 158 வாகனங்களுக்காக 85 நிரந்தர சாரதிகளும், 36 தொழிலாளர்களும் மற்றும் 02 இயந்திர செயற்படுத்துனர்களும் இருந்த போதிலும், 35 வாகனங்களுக்காக சாரதிகள் வெற்றிடமாகக் காணப்பட்டனர்.

(இ) 2014 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 03 வாகன விபத்துக்களுக்குரிய காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நோயாளர் காவும் வண்டிக்கு 2017 பெப்ரவரி 02 ஆந் திகதி ஏற்பட்ட விபத்தின் நட்டப் பெறுமதி காப்புறுதி மூலம் மீளளிப்புச் செய்யப்பட்டதன் பின்னர் மிகுதித் தொகையான ரூபா 490,070 நோயாளர் காவும் வண்டியின் சாரயிடமிருந்து அறவிடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் திடீர் விபத்துக்களுக்குட்பட்டிருந்த 03 வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா 636,561 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், காப்புறுதி இழப்பீடு பெற்றுக்கொள்ளல் தவிர உத்தியோகத்தர்கள் கவனமின்மையின் காரணமாக, அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 100,151 நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(ஊ) சபைக்குச் சொந்தமாக 245 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், 04 ரெக்டர் வண்டிகள், 1 லொறி வண்டி, 08 வான் வண்டி, 02 கார் மற்றும் 04 முச்சக்கர வண்டிகள் என்பன வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன் வாடகைக்குப் பெற்ற 19 வாகனங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஒக்தோபர் வரை ரூபா 12,283,180 தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) சில டெக்டர்களின் ஓட்ட அட்டவணை சரியான பிரகாரம் பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன், சில டெக்டர்களில் ஓட்டம் மற்றும் எடுக்கப்பட்ட காலம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை மற்றும் சில நாட்களில் சாரதிகள் கைவிரல் அடையாள இயந்திரத்தில் வருகை மற்றும் வெளியேறுகை என்பன குறிப்பிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் சரியான பிரகாரம் முகாமை செய்யப்படாமையின் காரணமாக, வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சில வாகனங்கள், ஓடப்பட வேண்டிய ஆகக் குறைவான காலம் ஓடப்படாமை மற்றும் சில வாகனங்கள் ஓட வேண்டிய காலத்தை விஞ்சி ஓடப்பட்டமையால் சபைக்கு மேலதிக செலவினங்களைச் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) உத்தியோகபூர்வ இல்லங்களில் மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்களைத் தீர்த்தல் தொடர்பாக சரியான மேற்பார்வையொன்று இடம்பெறாமையினால் அநாகரிக தர்மபால மாவத்தையில் 14 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தின் நிலுவை நீர்ப்பட்டியலுக்காக ரூபா 87,844 தொகையொன்று சபையினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதனை வீட்டில் குடியிருந்தவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 ஆம் இலக்க பூங்காவீதி உத்தியோகபூர்வ இல்லம் 2015 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் 2016 செப்தெம்பர் 27 ஆந் திகதி வரை மூடப்பட்டிருந்ததுடன் நீர்க் கசிவின் காரணமாக அந்தக் காலத்திற்குரிய நீர்ப் பட்டியலாக ரூபா 4,710 தொகையொன்று சபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்பவர்களினால் உத்தியோகபூர்வ இல்லத்தின் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்த போதிலும், குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் குடியிருந்த 05 உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக தனித்தனியாக நீர் மற்றும் மின்சார மானிகள் பொருத்தப்படாதிருந்தமையால் அந்த விடுதிகளில் நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்கள் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தெஹிவளை மத்திய நூலகத்தை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் போது ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடவேண்டிய நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் ரூபா 409,294 தொகை அறவிடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தது.

(உ) கல்கிஸ்ஸ காலி வீதி இல. 368 இல் உள்ள நகர சபையின் இரண்டு மாடிக் கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்காக 2016 நவம்பர் 28 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு 2017 சனவரி 16 ஆந் திகதி ரூபா 171,352 முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2017 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைகள் 2017 திசெம்பர் 31 அந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டம்

2011 நவம்பர் 11 ஆந் திகதி முதல் 2016 ஏப்ரல் வரை சேவையைக் கைவிட்டுச் சென்ற ஊழியருக்காக ரூபா 1,413,903 தொகை சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்தப் பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்களில் மயான நில கட்டுப்பாட்டாளருக்கு கையளிக்கப்படுகின்ற சுடலைக் கட்டணம் அறவிடும் புத்தகங்கள் அடுத்துவரும் வேலை நாட்களின்போது சபைக்கு கையளிக்கப்படுகின்ற போதிலும் பணப் பெறுவனவு பற்றுச்சீட்டு மாத்திரம் பரீட்சிக்கப்பட்டு வருமானத்திற்கு எடுக்கப்பட்டமையால் தகனம் செய்யும் / அடக்கம் செய்யும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட தொகையும் பற்றுச்சீட்டின் பிரதிகளில் குறிப்பிடப்பட்ட தொகையும் வேறுபட்டமையினால் ரூபா 35,700 தொகையொன்று சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

**3.9 பெறுகைகள்**

**3.9.1 பெறுகைத் திட்டம்**

2017 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாமையினால் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 25,544,085 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் ஆண்டில் நிறைவேற்ற முடியாதிருந்தது.

**3.9.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

(அ) வளிப்பதனாக்கியுடன் இயந்திர இயலளவு 1600cc இற்கு மேற்பட்ட தெமுஹுமுன் வகையின் மோட்டார் வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அதற்கு முரணாக இயந்திர இயலளவு 1330cc மற்றும் 1490cc வாகனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது. மாதிரிகள் சரியாக இனங்காணப்படாமல் கூறுவிலைகள் கோரப்பட்டமையால் அதிக வழங்குனர்களின் எண்ணிக்கையில் கூறுவிலை கோருவதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.

(ஆ) லொறி வண்டியொன்றை வாடகை அடிப்படையில் பெறுவதற்கான மாதிரிகள் சரியாக இனங்காணப்படாமல் கூறுவிலை கோரப்பட்டமையினால் ஒரு வழங்குனர் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன் அந்த லொறி வண்டியும் 1996 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு 20 வருடங்களை விட பழைய மற்றும் டெக்ரரில் ஏற்றும் பாரத்தை விட ஏற்பட்ட பாரம் குறைவாக இருந்தமையால் குழுத்தீர்மானம் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(இ) வான் வண்டியை வாடகைக்கு எடுப்பதற்காக கூறுவிலை கோரும் நிபந்தனையின் பிரகாரம் வான் வண்டி இலங்கையில் பதிவு செய்து 10 வருடங்களுக்குள்ளாக இருக்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக சபையினால் 1997 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்டிருந்த 05 வாகனங்கள் வாடகைக்கு பெறப்பட்டிருந்தன.

(ஈ) பொருட்களை போக்குவரத்துச் செய்யும் டெக்ரர் வண்டியை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக கூறுவிலை கோரும் நிபந்தனையின் பிரகாரம் ஏற்றக்கூடிய நிறை 3.5 தொன் ஆக இருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக ஏற்றக்கூடிய பாரம் 1.5 தொன் நிறையுடைய 02 வாகனங்கள் வாடகைக்கு பெறப்பட்டிருந்தன.

(உ) தனியார் பாதுகாப்பு சேவையைப் பெற்றுக்கொள்வதற்குரிய உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரமும், கூறுவிலைக் கோரும் செய்திப்பத்திரிகை அறிவித்தலின் பிரகாரமும், சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற பாதுகாப்பு

உத்தியோகத்தர்களின் வயது எல்லை 18 வருடங்களிற்கு மேற்பட்டும் 55 வருடங்களுக்குக் குறைவாகவும் இருக்க வேண்டிய போதிலும், இந்த வயது எல்லையை விஞ்சி 11 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.9.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) சேவைப் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்காக திருப்திகரமாக வேலை பூர்த்தி செய்யப்பட்டமையை சிபாரிசு செய்து சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொஹுவல சந்தைத் தொகுதியில் சதொச விற்பனைக் கடைக்குள் மழை நீர் வடிந்தோடுதல் மற்றும் பிரதான வாயிலின் கதவு சரியான முறையில் பொருத்தப்படாதிருக்கும் போது இந்த பழுதுபார்த்தலுக்காக உரிய ஒப்பந்தகாரச் சங்கத்திற்கு ரூபா 6,984,130 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டில் பொதுமக்கள் நலன்புரிக்கான 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 64,350,000 மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 07 வருமானத் தலைப்புக்களின் கீழ் 10 வருமான விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,039,000 தொகையான வருமானங்களிலிருந்து மீளாய்வாண்டில் எந்தவொரு வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டமை. |
| | | (ii) | கணக்குகளில் குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | | (ii) | வரி மதிப்பீடு உரிய காலத்தில் இடம்பெறாமை |
| (இ) | ஒப்பந்தக் கட்டுப்பாடு | | மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படாமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | வருமான மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாகத் தயாரிக்கப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | வருமான செலவின விடயங்களில் கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| (உ) | கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | | மீதிகள் தீர்த்து வைக்கப்படாமை. |
| (ஊ) | ஊழியர் கடன் முகாமைத்துவம் | | கடன் மீதிகள் ஒழுங்கு முறையாக அறவிடப்படாமை. |
| (எ) | இருப்புக் கட்டுப்பாடு | | நீண்ட காலமாக விநியோகிக்கப்படாத இருப்புக்கள் காணப்பட்டமை |
| (ஏ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை. |
| | | (ii) | நிலையான சொத்துக்கள் கணக்கு வைக்கப்படாமை |